# <u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

O.S.No. 76/2024 Date : 01.06.2026

பெயர் : அய்யாதுரை பி.வா.சா. 1

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.

இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையொப்பம் செய்தீரா என்றால் ஆமாம்.பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்ன பரிகாரம் கோரி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து எந்த கிராம எல்லையில் அமைந்துள்ளது என்றால் திருநீர்மலை கிராம எல்லையில் அமைந்துள்ளது. தாவா சொத்தின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் தெரியும்.தாவா சொத்து மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என தெரியுமா என்றால் வாதி 25 செண்ட் இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.தாவா சொத்தின் நான்கு எல்லைகள் என்ன என்றால் எனக்கு வடக்கு தெற்கு பற்றி திசைகள் தெரியாது ஆனால் ஒரு பக்கத்தில் திருநீர்மலை தேரடி ரோடு மறுபக்கத்தில் திருமுடிவாக்கம் ரோடு, வலது புறத்தில் ஏர்போர்ட் ராஜா என்பவருக்கு சொந்தமான இடம், இடது பக்கத்தில் பட்டறை ஒன்று அமைந்துள்ளது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை
தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct

**S/d. C.P. Mullai Vanan**

District Munsif-cum Judicial Magistrate,

Pallavaram